பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 10 திங்கட்கிழமை (26-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 265

# டிசம்பர் வரை அவகாசம் கேட்கிறது இராணுவம்!

## புலிகளின் அழைப்பை அரசு நிராகரித்தது

கொழும்பு. ஆக. 26

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் முன்னேற்ற கரமான பெறுபேறுகளைக் காட்டுவதற்கு இந்த வருட இறுதிவரை மேலும் கால அவகாசம் வழங்குமாறு இராணுவத் தலைமைப்பீடம் ஸ்ரீலங்கா அரசைக் கோரியிருக்கிறது.

இதற்கிடையில்—

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் விடுத்துள்ள சமாதானப் பேச்சுக்கான அழைப்பை ஸ்ரீலங்கா அரசின் சார்பில் அதன் அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்க நிராகரித்திருக்கிறார்.

நிபந்தனையற்ற பேச்சுக்கு புலிகள் தரப்பில் விடுக்கப்பட்ட அழைப்பை நிராகரித்த அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அரசு விதித்திருக்கும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்த அரசின் கதவுகள் திறந்தே உள்ளன என்று சொன்னார்.

அமைச்சர் ரணிலின் இந்த அறிவிப்பை வெரித்தாஸ் வானொலி நேற்று வெளியிட்டது.

இதனிடையே—

ஆனையிறவு போர்க்களப் பெறுபேறுகளை அடுத்து, புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளில் மேலும் வெற்றிகளைக் காட்டுவதற்கு, இன்னும் கால அவகாசம் வழங்கும்படி இராணுவத் தலைமைப்பீடம் அரசைக் கோரியிருப்பதாக மிகவும் நம்பகமாகத் தெரிய வருகிறது.

கடந்த ஜனவரி முதல் வாரத்தில் விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தை அறிவித்த வேளையில்—

இராணுவ நடவடிக்கைகளில் வெற்றிகளைக் காட்டுவதற்கு ஜூன் மாதம் வரை கால அவகாசம் வழங்கும்படி அரசை இராணுவத் தலைமைப்பீடம் கோரியது என்பது தெரிந்ததே.

இப்போது டிசம்பர் மாதம் வரை மேலும் கால அவகாசம் வழங்கும்படியும்—

அதற்குள் சிறப்பான பெறுபேறுகளைத் தாம் காட்டுவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஆக. 26

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த ''லில்லி'' கப்பலில் 368 தபால் பொதிகள் வந்துள்ளன- இந்தத் தபால் பொதிகள் நேற்றிரவே யாழ் தபாலகத்துக்கு எடுத்துவரப்பட்டன.

தபால்களைப் பிரித்து விநியோகிக்கும் வேலைகள் இன்று நடைபெறும் என தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## சிப்பாய் கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 26

கடந்த புதனன்று நண்பகல் ஒரு மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் முறக்கொட்டாஞ்சேனை முகாமில் இருந்து சந்தி வெளிக்குச் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணி வெடித் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காலை இழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

கைதிகள் பரிமாற்ற விவகாரம்:

## உபாலிக்காக மரியதாஸனை விடுவிப்பது சாத்தியமல்ல!

### சபையில் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு. ஆக. 26

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கே. எல். உபாலி என்ற சிப்பாய்க்குப் பதிலாக மரியதாஸன் என்ற சந்தேக நபரை விடுவிப்பது சாத்தியமானதல்ல.

— பிரதமர் டி. பி. விஜேதுங்க அண்மையில் நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார்.

சுதந்திரக்கட்சி எம்.பியான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே பிரதமர் இப்படிச் சொன்னார்.

''அமிர்தலிங்கம் கொலை தொடர்பான சந்தேகத்தின் பேரில் மரியதாஸன் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். அக்கொலை சம்பந்தமான விசா

[3 ஆம் பக்கம் பார்க்க]

## அக்கரைப்பற்று தாக்குதலில் பொலீஸ் கமாண்டோ பலி

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றுக்கு அருகே வகுகலப் பகுதியில் நேற்று முன்தினம் ரோந்து சென்று கொண்டிருந்த அதிரடிப் படையினர் மீது விடுதலைப் புலிகள் திடீர்த் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

அதில் பொலீஸ் கொமாண்டோ ஒருவர் கொல்லப்பட்டார், மூவர் காயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

அப்பகுதியில் இருதரப்பினருக்கும் இடையே பல மணி நேரம் சண்டை நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ-3)

மெதடிஸ்த திருச்சபைக்கு

## கொள்கலனில் வந்த உணவு; இங்கு எடுத்து வர அனுமதி

கொழும்பு, ஆக. 26

வட பகுதியில் விநியோகிப்பதற்கு என்று கனடாவில் இருந்து இரண்டு கொள்கலன்களில் கொண்டுவரப்பட்ட குழந்தைகள் பாலுணவு உட்பட மற்றும் பொருள்கள் வட பகுதியில் உள்ள மெதடிஸ்த தேவாலயத்தினருக்கு அனுப்பிவைக்கப்படும்.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூகநலத்துறை துணை அமைச்சர் திருமதி சமந்தா கருணாரத்தினா இத்தகவலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இக்கொள்கலன்களில் ஏனைய பொருள்களுடன் இராணுவச் சீருடைகளும் இருந்தன என்று சுதந்திரக் கட்சி எம். பி. எஸ். பி. திஸநாயக்கா தாம் எழுப்பிய கேள்வி ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

அந்தக் கேள்விக்கு பதிவளிக்கையில் துணை அமைச்சர் இத்தகவலை வெளியிட்டார்.

கனடா குழந்தைகள் நிதியத்தினரால் அனுப்பப்பட்ட

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்கே "பட்டரி"கள் எடுத்துச் சென்றோர் கைது!

கொழும்பு, ஆக. 26

மட்டக்களப்புக்கு ''ரோச் பட்டரி''களை எடுத்துச் சென்ற இருவர், பொலநறுவையில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

தமிழர் ஒருவரும், முஸ்லிம் ஒருவரும் சேர்ந்து 15 பெட்டிகளில் ''ரோச் பட்டரி''களை எடுத்துச் சென்றனர். அவர்கள் சென்ற பஸ்ஸை மன்னம்பிட்டிய பாலத்தில் வைத்துப் பொலீஸார் சோதித்தனர்.

''பட்டறி'' தடைசெய்யப்பட்ட பொருள் எனக் கூறி அதை எடுத்து வந்ததற்காக அவர்கள் இருவரையும் பொலீஸார் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர்,

அரசாங்கம் கிழக்கிற்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் பிரதம உளவாளி கொழும்பில் கைதாம்

கொழும்பு, ஆக. 26

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பிரதம உளவாளி ஒருவரை கொழும்பில் பொலீஸார் கைது செய்திருக்கின்றனராம்.

நகுலேஸ்வரன் என்ற இந்த நபர் குற்றப்புலனாய்வுப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுத் தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

முப்பது வயதான நகுலேஸ்வரன் விடுதலைப் புலிகள் உளவறியும் பிரிவின் சிரேஷ்ட அங்கத்தவர் என்றும்—

கொழும்பில் உளவறிவதற்கென இவர் வல்வெட்டித்துறையில் இருந்து அனுப்பப்பட்டார் என்றும்—

கடந்த இரண்டு வருடங்களாக நகுலேஸ்வரன் கொழும்பில் வாழ்ந்திருக்கிறார் என்றும்—

தாக்குதல் மேற்கொள்ளப்பட வேண்டிய இடங்களை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## சீனா மௌனம்

பீகிங், ஆக. 26

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி கலைக்கப்பட்டது தொடர்பாக சீனா இன்னும் உத்தியோக பூர்வமாக கருத்து வெளியிடவில்லை. (இ-எ)

தமிழக இடைத் தேர்தல் முடிவுகள்:

## சென்னை நகரத் தொகுதிகள் இரண்டிலும் தி.மு.க. வெற்றி!

### மற்றைய இரு தொகுதிகள் அ.தி.மு.காவுக்கு

சென்னை, ஆக.26

கடந்த ஜூனில் நடைபெற்ற தமிழகத் தேர்தல்களில் படுதோல்வியடைந்த தி.மு.க.. சுமார் இரண்டரை மாதங்களின் பின்னர் அங்கு நடந்த இடைத் தேர்தல்களில் கணிசமான வெற்றியை பெற்றிருக்கிறது.

நான்கு தொகுதிகளில் இடம்பெற்ற இடைத் தேர்தல்களில், மூன்றில் போட்டியிட்ட தி. மு. க. அவற்றில் இரண்டில் வெற்றி பெற்றிருக்கிறது.

சென்னை நகரப் பகுதியில் இடைத் தேர்தல்கள் நடைபெற்ற இரு தொகுதிகளும் தி.மு.க. வசம் வந்திருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த இரு தொகுதிகளிலும் அ. தி. மு. க. ஆதரவுடன் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் வேட்பாளர்கள் தோற்றுப் போயினர்.

மற்றைய இரு தொகுதிகளிலும் போட்டியிட்ட அ. தி. மு. க. வேட்பாளர்கள் மிக அதிகப்படியான வாக்குகளுடன் வெற்றி பெற்றனர்.

துறைமுகம்

கடந்த தேர்தலில் தி.மு.க, தலைவர் மு. கருணாநிதி 890 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற துறைமுகம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

சோவியத் யூனியனில்

## மற்றும் இரு குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம்

மொஸ்கோ, ஆக. 26

மற்றும் இரு சோவியத் குடியரசுகள் நேற்று தனி நாடாக சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டுள்ளன.

உக்ரெய்ன் குடியரசும், மொல்டோவியாவுமே அந்த இரு குடியரசுகளும் ஆகும்.

ஏற்கெனவே பால்டிக் நாடுகளான லித்துஏனியா, லத்வியா, எஸ்தோனியா ஆகியவை சுதந்திர பிரகடனம் செய்து கொண்டது தெரிந்ததே.

தனிநாடு பிரகடனத்துக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கான சர்வஜன வாக்[illegible] டிசம்பர் மாதம் நடத்த உக்ரெய்ன் நாடாளுமன்றம் தீர்மானித்துள்ளது.

ருமேனியாவுடன் மொல்டோவியா இணைந்து கொள்வதற்கான முதல்படியே மோல்டோவியாவின் சுதந்திர பிரகடனம் என்று அதன் சபாநாயகர் அறிவித்துள்ளார். மொல்டோவியாவின் தேசிய இனங்களில் ருமேனியர்களே பெரும்பான்மையினர்.

சோவியத் யூனியன் மொத்தம் 15 குடியரசுகளைக் கொண்டது. இவற்றுள் பொறிஸ்யெல்சினை ஜனாதிபதியாகக் கொண்ட ரஷ்யக் குடியரசே சனத்தொகை [illegible] பொருளாதார வளத்தாலும் முதன்மை ஸ்தானத்தில் இருந்து வருகிறது. (இ)

சோவியத்திலிருந்து பிரிந்த

## பால்டிக் குடியரசுகளுடன் டென்மார்க் ராஜீய உறவு

பாரிஸ், ஆக. 26

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்று தம்மைச் சுதந்திர நாடுகளாகப் பிரகடனம் செய்திருக்கும் லித்துஏனியா, லத்வியா மற்றும் எஸ்தோனியா ஆகிய குடியரசுகளுடன் ராஜதந்திர உறவுகளை வைக்கப்போவதாக டென்மார்க்கும் நோர்வேயும் அறிவித்திருக்கின்றன.

விரைவில் அந்த நாடுகளுக்கு தூதர்களை பரிமாற்றஞ்செய்யப் போவதாகவும் அவை அறிவித்திருக்கின்றன. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தேவை

எலுமிச்சை, மா போன்ற நாற்றுக்கள் உண்டுபண்ணக் கூடிய வெற்றுத் தகரப் பேணி கள் மற்றும் ஜாம் போத்தல் கள், ஜாம் போத்தல் மூடி கள் தேவை. தொடர்பு: சைவ வித்தியா விருத்திச் சங் கம். கலாசாலை வீதி, திரு நெல்வேலி. [சி-0390]

பெண்கள், சிறுவர்களுக் குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக் கூடியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வினோபா ரேட் சென்ரர், 42 மணிக்கூண்டு வீதி யாழ்ப் பாணம். [எழிலகத்தின் முன் பாக] (17885)

## காணவில்லை

அரசடிச்சந்திக்கும், நல்லூ ருக்குமிடையில் 22 8-91 இல் சங்கிலிப் பென்ரன் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக் கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (17894)

## வானொலி நாடகம்

வானொலி நாடகம் எழு திப் பழக வேண்டுமா? 172 வானொலி நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந் தரம்பிள்ளையின் நூல்களை வாசியுங்கள். கெட்டிக்காரர் கள் 25/- முதலாம்பிள்ளை 30/- மாணவர்களும், படிப்ப தற்கும், நடிப்பதற்கும் ஏற் றவை. (17839)

## நுளம்புத் தொல்லைக்கு

நுளம்புத் தொல்லையா! ''நீம்'' இருக்கப் பயமேன்? நீ தூபம் புகைத்து நிம்மதி யாகத் தூங்குங்கள். 40கிறாம் பைக்கெட் ரூ. 2/50 மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். (சி/0391)

## ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூ..., 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம் (சி-0290)

## வைத்தியம்

மூலங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், பீனிசம், தலையிடி, தலை சுற்றல், சூதகக்குத்து, சருமநோய்கள் மற்றும் சகல வியாதிகளையும் குணப்படுத் துவார். வேலணை வைத் தியர், சி. இராசரத்தினம், 121, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (4818)

---

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்,
இலங்கை.

மருத்துவபீடம்

**இறுதியாண்டு மருத்துவபீட பரீட்சை**

991 [அக்டோபர்]

இறுதியாண்டு மருத் துவபீட பரீட்சை 21-10-1991 இல் ஆரம்ப மாகவுள்ளது.

பதிவாளர்.

[சி-0387]

---

# ENGLISH CLASSES

★ சகல தரத்தினர்களுக்கான ஆங்கில வகுப்புக்கள்
★ பிரபல விரிவுரையாளர்களினால் ஆரம்பமாகின்றன.

விவரங்களுக்கு:

**வட இலங்கை தொழில் நுட்ப கல்லூரி**
(NORTH CEYLON TECHNICAL INSTITUTE)
14, St Peter's Lane,
Jaffna. [சி-0412]

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 21 — 04 — 1925



உதிர்வு: 27 — 07 — 1991

திருமதி
**இரத்தினம் செல்லத்துரை**
(ஆனைக்கோட்டை)

திதி: 26 — 08 — 1991

அங்கையா லானமட்டும் அள்ளிச் சொரிந்துவிட்டு செங்கை சிவக்கச் சிரித்து நின்றாள் - சங்கை மிகு இரத்தினமாய் ஒளிர்ந்து நின்ற இல்பத் திருவும் - நவ இரத்தினமாய் ஒளிர்கின்றாளே.

மக்கள், மருமக்கள்.

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை வடக்கு. [4266]

---

## கம்பன் கோட்டத்தில் இன்று

யாழ்ப்பாணம், ஆக. 26

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் இசை அரங்கில் இன்று மாலை 5. 30 மணி முதல்—

சங்கீதபூஷணம் எஸ். சிவ ஞானராஜா, சங்கீதபூஷணம் ஐ. வேலாயுதபிள்ளை ஆகிய இருவரின் இன்னிசைக் கச்சேரி களும் நடைபெறும். [அ]

## அதிவேக ஓட்டவீரர் கார்லூயிஸ்

டோக்கியோ, ஆக. 26

நூறு மீற்றர் ஓட்டப் பந் தயத்தில் புதிய உலக சாதனை ஒன்றை ஏற்படுத்தி உலகின் அதிவேக ஓட்ட வீரர் என்ற பெயரை கார்ல் லூயிஸ் (Carl Lewis) நிலை நிறுத்தி யுள்ளார்.

இவர் டோக்கியோவில் நடந்த தட,கள விளையாட் டுப் போட்டிகளில் கலந்து கொண்டு 100 மீற்றர் தூரத்தை 9. 86 வினாடிகளில் ஓடி முடித்தார்.

கடந்த ஜூன் மாதம் லெரோய் பரல் என்பவர் நூறு மீற்றர் தூரத்தை 9. 90 செக் கன்களில் ஓடி முடித்து நிலை நாட்டிய சாதனையை கார் லூயிஸ் இப்போது முறிய டித்திருக்கிறார். (உ-எ)

## சிவகுமாரன் பிறந்ததின வைபவம்

யாழ்ப்பாணம், ஆக. 26

தியாகி சிவகுமாரனின் 42 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு உரும்பராயில் உள்ள சிவகுமாரன் ஞாப கார்த்த அரங்கில் இன்று காலை 7. 00 மணிக்கு அஞ் சலி வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விடு தலைப் புலிகள் மக்கள் முன் னணிப் பிரமுகர்கள் இந்த வைபவத்தில் கலந்து கொள் வார்கள். (இ)

---

# நெஞ்சத்தில் நின்னை வைத்தோம்

## வீரவேங்கை அல்பேட்

(நடராசா கலைச்செல்வன்) (பாபு)
(தையிட்டி)

தாயின் மடியில்: 28 05 - 1968

தாயக மண்ணில்: 27 - 07 - 1991



புலிப்படை வீரனாய்
களத்திலே ஆடினாய்
புல்லியர் குருதி நீரில்
வெளிப்படையாகவே
விரும்பி நீ ராடினாய்
விழுந்தனை மண்ணில் வீரா
எழுத்தினில் ஒடுங்கிடா
புகழ் மலர் சூடினாய்
எங்களின் நெஞ்சில் பூத்தாய்
எழுந்து நாம் நிற்கிறோம்
ஏகுவோம் நின் வழி
எழிற்றமிழ் ஈழம் காண்போம்
விழுந்திடல் இனியிலை
வீர நின் தாளிலே
விருப்புடன் நெஞ்சை-
வைத்தோம்
கலைந்திடா ஒளியும் நீ!
காவியப் பொருளும் நீ!
கருத்தினில் ஒன்றி
வாழ்வோம்.

—நண்பர்கள்.

(17892)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

27-7-1991 இல் ஆனையிறவில் இலங்கை இராணுவத் துடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த

**வீரவேங்கை "டட்லியா"**
**(வரலெட்சுமி தேவசிகாமணி)**

அன்னாரின் வீட்டில் இன்று நடைபெறும் அந்தி யேட்டிக் கிரியையிலும், மதியம் சபிண்டிக்கிரியையிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்கள்.

''ரூபவாசம்''
சடையாண்டி கோவிலடி,
வல்வெட்டித்துறை. (17895)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 15 — 05 — 1947



மறைவு: 13 — 7 — 1991

**அமரர் சு. ஆனந்தராசா**
(கண்ணியம்)

இந்நாளில் தங்களை நினைவு கூரும்!

மனைவி, பிள்ளைகள்.

கொய்யத்தோட்டம்,
இருபாலை. (17673)

---

## 90 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 28 — 02 — 1968



மறைவு: 28 — 05 — 1991

செல்வன்
**துரைராஜா ஜெயக்குமார்**
(யாழ் பல்கலைக்கழக விவசாயபீட மாணவன், கிளிநொச்சி)

எங்கள் தவச் செல்வமே! குலவிளக்காக இருந்து வாழ்ந்த எம் செல்வமே! பால்மணம் மாறாத உன் திருமுகத்தைக் காணாது பரிதவித்துக்கொண் டிருக்கின்றோம்.

பட்டம் பதவியுடன் பாரினில் வாழ்வேன் என்று எண்ணி
கற்பனையால் வாழ்ந்தாயடா!
நிறைவேறும் முன் நீ எங்கேயடா
கணப்பொழுதில் சென்றாய்
சடுதியாய் உன் உயிர் பிரிந்ததுவே!
இவ்வையகத்தில் நாம் மட்டும் வாழ்வோம்
என்று எண்ணினரோ
உன் உயிரை பறித்தனரே அநியாயமாய்
வாழத் தெரியாது தவிக்கின்றோம்
பாசமுள்ள அண்ணனே நினைவிழந்து
நாம் கலங்கித் தவிக்கின்றோம்;
எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்குதான் சென்றீரோ
எம் இதயத்தின் ஒளிவிளக்கே உன் நினைவு
எம்மை விட்டு நீங்காதையா ......

உன் பிரிவால் வாடும்:
சகோதரர்கள்.

தெல்லிப்பளை. (17842)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எச்சரிக்கை தேவை

வெடிக்காத நிலையில் கண்டெடுத்த "ஷெல்"லை வீட்டுக்குக் கொண்டு சென்று சூடுகாட்டிக் கழற்றிப் பார்க்க முயன்ற இரண்டு இளைஞர்கள், அவலமாகச் சாக நேர்ந்தது! சூடேறிய ஷெல் வெடித்ததில் அவர்கள் இருவரும் அடையாளம் காணமுடியாதவாறு உடல் சிதறிப் பலியானார்கள்.

மற்றொரு சம்பவத்தில், வீதியில் கிடந்த துப்பாக்கிச் சன்னம் ஒன்றைக் கல்லில் வைத்துக் குத்திப் பார்த்த இளைஞர், அது வெடித்ததில் காயமுற்றார்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகத் தமிழ்மண் இராணுவ நடைமுறைகளுக்கு உட்பட்ட, ஆட்பட்ட ஒரு பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. குறிப்பாக 1983 ஆம் ஆண்டின் பின்னர், தமிழ்ப் பிரதேசங்களில் ஸ்ரீலங்கா இராணுவ முகாம்கள் மிக நெருக்கமாக, அடர்த்தியாக நிறுவப்பட்டதில் இருந்து, நவீன ஆயுதங்களும், வெடிப் பொருள்களும் மற்றும் பலவகை இராணுவத் தளபாடங்களும் மிகத் தாராளமாகக் குவிக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா அரசாங்கங்கள், தமிழர் மீது தமது ஆதிக்கத்தையும், அதிகாரத்தையும் நிலைநாட்டுவதற்காகப்பெரும் பணச் செலவில் இராணுவ ஆயுதங்கள், தளபாடங்களை வாங்கிவந்து இங்கு குவித்து, தமிழ் மண்ணை முழுமையான இராணுவப் பிரதேசமாக்கியுள்ளன.

நவீன இராணுவ ஆயுதங்கள் மற்றும் இராணுவத் தளபாடங்களை உபயோகித்துத் தமிழர்களை இன ஒழிப்புச் செய்வதும் சிங்கள அரசுகளின் நோக்கமாக இருந்தது.

அந்த நோக்கத்தை அவை நிறைவேற்ற முழுமூச்சுடன் முயன்ற போது, இராணுவ ஆயுதங்கள் தமிழ் மண்ணில் இடைவெளி இல்லாது இரத்த ஆறு பாய வைத்தன. 1991 ஜூன் மாதத்தின் பின்னர் கடந்த பதினைந்து மாதங்களாக தமிழ் மண்ணில் இரத்தம் கடலாக ஓடிக்கொண்டிருக்கிறது.

இன அழிப்பின் பொருட்டு ஸ்ரீலங்கா இராணுவம் வீசும் எறிகணைக் குண்டுகளான "ஷெல்" கள், மற்றும் விமானக் குண்டுகள், ஹெலிக்கொப்டரின் எறிகுண்டுகள் எங்கே புதைந்து கிடக்கும் என்பது தெரியாது. அவற்றில் பல செயற்படாமலே மண்ணில் — வயலில் — வீதியில் — வீட்டில் — கடலில் கிடக்கலாம்.

அவற்றைக் கண்டால், அவற்றுடன் விளையாடவோ அல்லது ஆராய்ச்சி செய்து பார்க்கவோ முனையக் கூடாது. சிறுவர்கள் அவற்றை வைத்து விளையாட விரும்புவார்கள். இளைஞர்கள், மாணவர்கள் அதனை வைத்து "ஆராய்ச்சிகள்" "கண்டு பிடிப்புகள்" செய்ய முனைவார்கள். இளங்கன்று பயமறியாது; வயதுக்கேற்ற கோளாறுகள் அவை. இராணுவ ஆயுதங்கள், வெடிப் பொருள்களின் ஆபத்துகளை அறியாமையாலும் வேண்டாத விபத்துக்கள், விபரீதங்கள் நடக்கலாம்.

மேலே குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களும் எமது சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கும் பெரும் படிப்பினையாக அமைய வேண்டும்.

உயிராபத்து விளைவிக்கும் எந்தப் பொருளையும் விளையாட்டுத் தனமாகவோ அல்லது தெரியாத்தனமாகவோ கையாளக் கூடாது என்பதை எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

## வர்மா கமிஷன் காலவரம்பு நீடிப்பு

சென்னை, ஆக. 26

கொலைசெய்யப்பட்ட இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஏதாவது குறைபாடு இருந்ததாஎன்பது பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட நீதிபதி வர்மா கமிஷனின் காலவரம்பு டிசம்பர் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இன்றுடன் முடிவடைய இருந்த காலவரம்பை நீடிக்கும் அறிவிப்பை மத்திய உள்துறை அமைச்சு நேற்று வெளியிட்டது. (இ-த)

## பருத்தித்துறையில் கப்பல் லில்லி

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த 'லில்லி' கப்பலில் உணவுப் பொருள்களுடன் தபால்களும் வந்து சேர்ந்தன.

ஒவ்வூதிய வவுச்சர்களும், மற்றும் அத்தியாவசிய பொருள்களும் வந்து சேர்ந்துள்ளன. [இ-3]

## கிழக்கே...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

எடுத்துச் செல்ல தடைவிதித்த பொருள்களில் "பட்டரி" கள் அடங்கவில்லை. ஆயுதங்கள், ரவைகள், வெடிமருந்துகள், யூரியா உரம் ஆகிய மூன்று பொருள்கள் மட்டுமே தடை செய்யப்படுவதாக இம்மாத மத்தியில் அறிவிக்கப்பட்டிருந்தது. (அ-3)

## உபாலிக்காக...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ரணை இன்னும் முடியவில்லை.

சிப்பாய் உபாலியை விடுவிப்பதற்குப் பதிலாக அரசின் காவலில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் வேறு எவரையாவது, விடுதலை செய்ய அரசு தயாராக உள்ளது.

உபாலியை விடுவிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும்படி அரசு செஞ்சிலுவைச் சங்கத்தைக் கேட்டுள்ளது."

—இப்படிப் பிரதமர் மேலும் சொன்னார். (உ-எ)

## கொள்கலனில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பாலுணவு மற்றும் பொருள்கள் இக்கொள்கலன்களில் வந்தன. அவற்றை வடக்கிற்கு எடுத்துச்செல்ல விடாது அரசு முன்னர் தடைசெய்திருந்தது தெரிந்ததே.

"கொள்கலன்கள் பற்றிய விசாரணை முடிந்துவிட்டது. அப்பொருள்கள் தற்போது அமைச்சின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ளன.

வட பகுதி அகதிகளுக்கு விநியோகிப்பதற்காக அவற்றை அங்கு உள்ள மெதடிஸ்த தேவாலயத்தினருக்கு அனுப்பிவைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது."

—இப்படி துணை அமைச்சர் மேலும் கூறினார். [உ-எ]

# போராளிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆக. 26

கடந்த ஜூலை 13 ஆம் திகதி ஆனையிறவில் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான சுரேஷ் [சுப்பிரமணியம் மணிவண்ணன் - ஓட்டுமடம், யாழ்ப்பாணம்] வீரமரணம் அடைந்தார்.

17 ஆம் திகதி ஆனையிறவு மோதலில் பாலச்சந்திரன் [பியதாசா யேசுராஜன் - மன்னார்], புஷ்பன் [பிரகாசம் நோயல் தோமஸ் - நெடுந்தீவு], பரணி [முத்துவேல் காந்தலிங்கம் - வேலணை] ஆகியோரும்—

21 ஆம் திகதி கட்டைக்காடு மோதலில் யோகன் [கிட்ணர் உதயகுமார் - மட்டக்களப்பு], சபூர் [தங்கவேல் நடேசன் - கிளிநொச்சி], அயுர்தன் [பொன்னுத்துரை மோகன் - வைதடி] ஆகியோரும்—

27 ஆம் திகதி கட்டைக்காட்டு நேரடி மோதலில் சௌகான் [சிவானந்தன் ஜோய் அன்ரனி - பண்டத்தரிப்பு] என்றபோராளியும்—

ஆகஸ்ட் 3 ஆம் திகதி ஆனையிறவு மோதலில் கப்டன் சாரா [இமானுவல் ஜோன்சன்-திருமலை], விமலசுந்தரம் [வீரசிங்கம் தெய்வநாயகம் - தம்பலகாமம்], குமணன் [பரமகுமார் தியாகராஜா - திருமலை] ஆகியோரும்—

8 ஆம் திகதி ஆனையிறவு மோதலில் பகீர் [ஜெயராஜா சுனில் - இளவாலை] என்ற போராளியும் வீரமரணம் அடைந்தனர். (உ)

# மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஆக. 26

ஆனையிறவில் நடைபெற்ற பல்வேறு மோதல் சம்பவங்களில் வீரமரணமடைந்த மாவீரர்களான கப்டன் சாரா [இமானுவல் ஜோன்சன் திருமலை], விமலசுந்தரம் [வீரசிங்கம் தெய்வநாயகம் - தம்பலகாமம்], குமணன் [பரமகுமார் தியாகராஜா - திருமலை], தர்மன் [ராஜதுரை ரவீந்திரகுமார் - கோப்பாய்] ஆகியோரின் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக நேற்று கோப்பாய் சரவணபவானந்தா பாடசாலையில் வைக்கப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் புகழுடல்கள் கோப்பாய் மாவீரர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. [உ]

# விபுலாநந்தர் பற்றிய தகவல்களை தந்து உதவுக!

## பொதுமக்களுக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஆக. 26

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்தரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவர் தொடர்பான தகவல்களை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி சேகரித்து வருகிறது.

ஆகவே அவரின் வரலாறு தொடர்பான தகவல்கள், அவரது எழுத்துக்கள்[ கடிதங்கள் [கட்டுரைகள், நூல்கள்] என்பவற்றை வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவுமாறும்—

தந்துதவுவோரின் பெயர்கள் உரிய வகையில் நன்றியுடன் வெளியிடப்படும் என்றும்—

இவை பிரதிபண்ணப்பட்ட பின்னர் உரியவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும் என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் அறிவித்துள்ளது

இவற்றைத் தந்துதவுவோர் அடிகளார் பற்றிய அறிவார்ந்த அம்சங்களையும், பணிகளையும் தமிழ் கூறும் நல்லுலகப் பரவலாக அறிந்துகொள்ள உதவுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவை இந்த ஆண்டு மார்ச் மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் ஓராண்டுக்கு தமிழீழம் எங்கும் கொண்டாட தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளது. [இ]

## புலிகளின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இனங்காணுதல், அவை சம்பந்தமான வரைபடங்களைத் தயாரித்தல், தகவல்களை வழங்குதல் என்பன அவரது கடமைகளாக இருந்தன என்றும் அரசாங்க தகவல் சாதனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முக்கியமான தகவல்கள் அனைத்தையும் அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள விடுதலைப் புலிகள் தலைமையகத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## ஷெல் வீச்சின் மத்தியில் தேர்

யாழ்ப்பாணம், ஆக. 26

தொண்டமானாறு செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா பலத்த ஷெல் வீச்சின் மத்தியிலும் சிறப்பாக நடந்தேறியது. பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் தேர்ப் பவனியைத் தரிசித்தனர்.

செல்வச்சந்நிதி தேர்த் திருவிழா கடந்த சனிக்கிழமை காலை நடைபெற்றது. அவ்வேளை பலாலியிலிருந்து அச்சுவேலிப் பக்கமாக அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் திரண்டு வந்ததை அவதானிக்க முடிந்தது. [அ-126]

## கடத்தல் முயற்சி

லண்டன், ஆக. 26

60 கிலோ ஹெரோயின் போதை வஸ்துக கடத்த முயன்ற தாய்லாந்து இராஜதந்திரி ஒருவர் உட்பட, நாலவரை பிரிட்டிஷ் சுங்கத்திணைக்கள அதிகாரிகள் லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் நேற்று கைது செய்தனர்.

எஞ்சிய மூவரும் பாகிஸ்தானிய பிரஜைகள் ஆவர்.

கைதான தாய்லாந்து ராஜதந்திரிக்குரிய ராஜதந்திர சலுகையை பிரிட்டிஷ் அரசின் கோரிக்கைக்கு இணங்க தாய்லாந்து அரசு ரத்துச் செய்துவிட்டது. (இ-எ)

## ரஞ்சனுக்கு சிலையாம்

யாழ்ப்பாணம், ஆக. 26

கொழும்பு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட ரஞ்சன் விஜேரத்தினாவுக்கு தெரணியகலையில் சிலை ஒன்று அமைக்கப்பட உள்ளதாம். அவர் ஆற்றிய சேவையைப் பாராட்டியே இந்தச் சிலை நிறுவப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## யாருடையது?

யாழ்ப்பாணம், ஆக். 26

யாழ். போதனா வைத்தியசாலை 24ஆம் வார்ட்டில் இருந்து தங்கச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### சடலங்களை அடையாளம் காட்ட

# நளினி பெங்களுருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்

பெங்களூர், ஆக. 26

தற்கொலை செய்து கொண்ட சிவராசன், சுபா உட்பட ஏழு பேர்களையும் அடையாளம் காட்ட ஏற்கனவே கைதாகி காவலில் வைக்கப்பட்டிருக்கும் நளினியை விசேட புலனாய்வுப் பொலீஸார் நேற்று பெங்களூருக்கு கூட்டிச்சென்றனர்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக நளினி ஏற்கனவே கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். (இ-எ)

### ராஜீவ் கொலை தொடர்பாக

# 26 புலிகள் இன்னும் தேடப்படுகின்றனராம்!

கொழும்பு, ஆக. 26

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக,இன்னும் 26 விடுதலைப் புலிகள் இயக்கத்தினரைத் தேடி விசேட புலனாய்வுத்துறையினர் சோதனைகளை நடத்தி வருகின்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

பெங்களூரில் தற்கொலை செய்து கொண்ட சிவராசனிடமிருந்து கைப்பற்றப்பட்ட அவரின் நாட்குறிப்பில் இந்த இருபத்தாறு பேரினதும் பெயர்களும் எழுதப்பட்டிருந்தன என்றும் பொலீஸார் தெரிவித்தனர். [இ-எ]

# மக்களின் மனமாற்றம் என்கிறார் தி. மு. க. செயலர்

## தேர்தல் முடிவுகள் பற்றி அறிக்கை

சென்னை, ஆக. 26

இடைத் தேர்தல்களில் சென்னையில் தி. மு. க. பெற்ற வெற்றி மக்களின் மனமாற்றத்தை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

தி. மு. க. பொதுச் செயலாளர் க. அன்பழகன் தேர்தல் முடிவுகள் குறித்து நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார். [உ-எ]

# அஞ்சிடப் போவதில்லை!

வஞ்சரை வன் பித்தரை
வன் செயலரை வன் பகை சூழ்
நெஞ்சரை தீய நீசரை
நீள் வெறியரை எம்நிலங் கொள்
நஞ்சரை கெடு நாசரைக்
கீழ் மனத்தரை மிகு கஞ்சரை
அஞ்சிடப் போவதில்லை நல்லூரா!
உந்தனருளுண்டே!

—முருகனடியான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ திருமணத் தூது ★

அன்புடையீர்!
நிகழும் 28-08-1991 புதன்கிழமை காலை 8-30 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆலய மணிகள் மங்கள ஒலி இசைக்க

எனது புதல்வன்
திருநிறைசெல்வன்
**றொபேட்**
(ஆசிரியர், யாழ். பரியோவான் கல்லூரி)
அவர்களும்

★★★★★★

எனது புதல்வி
திருநிறை செல்வி
**வேர்ஜினி**
அவர்களும்

மெய்விவாகப் பந்தனத்தில் இணையவிருக்கும் திருச்சடங்கில் பங்கு பற்றி புதுமணத் தம்பதிகளுக்கு ஆசிகள் வழங்கி வாழ்த்துமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி
திரேசம்மா திருச்செல்வம்,
''லக்ஸ்மாலா இல்லம்'',
48, 3ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

திரு. அகஸ்ரின் சிங்கராயர்,
48, கடற்கரை வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.
[17879]



யாழ். பல்கலைக்கழக
# வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## கல்வியாண்டு 1991/1992

(பல்கலைக்கழக வசதிகள் அனைத்தும் கொண்ட அங்கீகாரம் பெற்ற ஒரே நிறுவனம்)

கலை முதற் தேர்வு — G. A. Q.
வணிக முதற் தேர்வு — ISt. in Com.

ஆகிய தேர்வுகளிற்கான பதிவுகள்
01-09-1991 முதல் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

Registrar.
COLLEGE OF HIGHER STUDIES,
ANAIPANTHY.

மு. குறிப்பு: 1. பேராதனை பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகளிற்கான விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.
2. பட்டப்படிப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த யாழ். விரிவுரையாளர்களும், யாழ். விக்னா கல்வி நிலைய விரிவுரையாளர்களும் ஒருங்கிணைந்த சேவை.

[சி-0406]


# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்:
22 - 11 - 1966

இறைவன் அடியில்:
26 - 8 - 1988

## அன்னலிங்கம் இராஜசேகரம்

அன்பின் செல்வமே ராஜன்!
நீ மறைந்து மூன்று ஆண்டுகள் சென்றாலும் எம் இதயங்களில் வாழ்ந்துகொண்டேயிருக்கிறாய். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள், மச்சான்மார்,
மருமக்கள், மாமி,
உறவினர்கள், நண்பர்கள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
[17854]

# யாழ். ஆஸ்பத்திரியில் கண்மாற்றுச் சிகிச்சை

## மூன்றாவது தடவையாக நடந்தது

யாழ்ப்பாணம், ஆக. 26
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் மூன்றாவது முறையாக கண் மாற்றுச் சிகிச்சை நடைபெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நடராசா [42 வயது] என்பவருக்கு, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கதிரவேலு [65 வயது] என்பவரின் கண் வெள்ளியன்று மாற்றுச் சிகிச்சை மூலம் பொருத்தப்பட்டது.

கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் இந்த மாற்றுச் சிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்தார்.

திரு. வே நடராசா வெடிவிபத்து ஒன்றின்போது தமது முதலாவது கண்ணின் பார்வையை இழந்தார். மூன்று மாதங்களுக்கு முன்னர் மகன் அடித்ததால் இரண்டாவது கண்ணின் பார்வையையும் இழந்தார்.

திரு. க. கதிரவேலு கண் தானம் செய்வதற்கு பதிவு செய்திருந்தார். அவர் நெஞ்சு நோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். வெள்ளிக்கிழமையன்று அவர் காலமானதும் அவரது கண்களில்ஒன்றே நடராசாவுக்குப் பொருத்தப்பட்டது. அவரது மற்றக் கண் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. [அ-15]

## சென்னை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொகுதியில், இரண்டரை மாதங்களின் பின்னர் அவரது கட்சியைச் சேர்ந்த ஏ.செல்வராஜன் 3 ஆயிரத்து 236 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றிருக்கிறார்.

ஏ. செல்வராஜனுக்கு [தி.மு.க.] - 19 ஆயிரத்து 347 வாக்குகளும், அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பிரபல தொழிற் சங்கத் தலைவர் க. சுப்புவுக்கு [இந்திரா காங்கிரஸ்] 16 ஆயிரத்து 111 வாக்குகளும் கிடைத்தன.

### எழும்பூர்

எழும்பூர் தொகுதியில் தி.மு.க. வேட்பாளர் பரிதி இளம்வழுதி 23 ஆயிரத்து 139 வாக்குகளைப் பெற்றார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் டி. யசோதாவுக்கு 21 ஆயிரத்து 936 வாக்குகள் கிடைத்தன.

### காங்கேயம்

பெரியார் மாவட்டம்-காங்கேயம் சட்டசபைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அ. தி. மு. க. வேட்பாளரும் கல்வி அமைச்சருமான இராமவீரப்பன் 97 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இத்தொகுதியில் தி. மு. க தேர்தல் சின்னமான உதயசூரியனை தனது வேட்பாளரான பொன். இரத்தினசாமிக்கு ஒதுக்க தேர்தல் அதிகாரி மறுத்ததை அடுத்து தனது வேட்பாளரை தி.மு.க. தேர்தலிலிருந்து விலக்கிக் கொண்டது தெரிந்ததே.

### முசிறி

முசிறி சட்ட சபைத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் அ. தி. மு. க. வேட்பாளர் பிரின்ஸ் தங்கவேல் வெற்றி பெற்றார். அவர் தி. மு. க. வேட்பாளர் நடராஜனைவிட 31 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றார். [உ-எ-த]

## டிசம்பர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாகவும்—

இராணுவத்தினர் அரசுக்குத் தெரிவித்திருப்பதாக [illegible] தகவல் வெளியிட்டன. (உ-எ-3)

# லெனின் சிலை உடைப்பு

சோவியத்தில் சுதந்திரப் பிரகடனம் செய்திருக்கும் போல்டிக் குடியரசுகளில் ஒன்றான எஸ்தோனியாவில், முன்னாள் ரஷ்யத் தலைவர் லெனினின் சிலை அந் நகரமேயரின் ஆணைப்படி மக்களால் உடைத்தெறியப்பட்டது. (உ-த)

அரச ஊழியர்களின்

# போக்குவரத்து அலவன்ஸ்: அதிகரிப்பதற்கு முடிவு

கொழும்பு, ஆக. 26
அரசாங்க ஊழியர்களின் போக்குவரத்து அலவன்ஸ் அதிகரிக்கப்படும்.

சடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டதாக மந்திரி சபைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதன்படி வருடாந்த வேதனமாக 15 ஆயிரத்து 725 ரூபாவும் அதற்குக் குறைவாகவும் பெறும் ஊழியர்களின் போக்குவரத்து அலவன்ஸ் 50 ரூபாவில் இருந்து 125 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம் 15 ஆயிரத்து 726 ரூபாமுதல் 24 ஆயிரம் ரூபா வரை பெறுவோர் 150 ரூபாவும்—

24 ஆயிரத்து ஒரு ரூபா முதல் 47 ஆயிரத்து 999 ரூபா வரை பெறுவோர் 200 ரூபாவும்—

48 ஆயிரம் ரூபாவுக்கு மேல் பெறுவோர் 250 ரூபாவும் பெறுவர்.

அதிகரிக்கப்பட்டுள்ள புதிய ''மைல்தூர'' விகிதப்படி பிரத்தியேக காரொன்றுக்கு கிலோ மீற்றருக்கு 6ரூபா 25 சதமும், வாடகைக் காருக்கு 7ரூபா 50 சதமும், மோட்டார் சைக்கிளுக்கு ஒரு ரூபா 25 சதமும், சைக்கிளுக்கு 35 சதமும் பெறமுடியும். [இ-த]

# விசாரணை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஆக. 26
கொக்கட்டிச்சோலை படுகொலை பற்றி விசாரித்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது விசாரணைகளை இன்று 26 ஆம் திகதி முதல் மட்டக்களப்பு விமான நிலையக் கட்டடத்தில் வைத்து மீண்டும் நடத்தும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதம் 29 ஆம் திகதி வரை நடைபெறும் இவ்விசாரணைகளில் 30 சாட்சிகள் சாட்சியமளிப்பர். (இ-எ)


யுனைற்றட் என்ஜினியர்ஸ்
# தொழில் நுட்ப கல்வி நிறுவனம்

271, கச்சேரி நல்லூர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

ஆரம்பம் ஆகஸ்ட் 30

பயிற்சி நெறிகள்

மாலை நேர வகுப்புகள்
(i) ரேடியோ, ரிவி, டெக் சேவிஸிங் ஆறு மாதங்கள்
(ii) எலெக்ரிக்கல் வயறிங் மூன்று மாதங்கள்

விண்ணப்பங்களை நேரில் பெறலாம்.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
-பணிப்பாளர்.

(மாவீரரின் சகோதர, சகோதரிகளுக்கு விசேட சலுகைகள்)
(17890)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

நல்லூர் மூத்த விநாயகர் வீதியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (இளைப்பாறிய புகையிரத கட்டடப்பகுதி ஊழியர்) 25-8-91 இல் சிவபதமடைந்து விட்டார். அன்னார் பரம்சோதியின் அன்புக் கணவரும், ஆனந்தராசா, தனராசா, கிருபைராசா (இ போ.ச.), ரஞ்சனாதேவி, மகாதேவி (ஆசிரியர், சனசரத்தினம் ம. ம. வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னம்பலம், சின்னராசா, நாகராசா, நாகம்மா, பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், குணசேகரம், பரமானந்தம், விஜயகுமார், ரஞ்சிதமலர், ஜெயமணி, சந்திரவதனா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று (26-8-91) திங்கள் காலை 10-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக் கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பரமானந்தம்.
(மைத்துனர்)
87, மூத்தவிநாயகர் வீதி,
நல்லூர்.
[17899]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org